

# பாரதி பிறந்தார்

கவிதைகள்

கவிஞர் முருகுசுந்தரம்

# பாரதி பிறந்தார் - கவிதைகள்

# கவிஞர் முருகுசுந்தரம்

அட்டைப்படம் : N. Sathya - experimentsofme@gmail.com

மின்னூலாக்கம் : சி.ராஜேஸ்வரி - sraji.me@gmail.com

வெளியிடு : FreeTamilEbooks.com

உரிமை : Public Domain – CC0
உரிமை – கிரியேட்டிவ் காமன்ஸ். எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.

# பொருளடக்கம்

பதிப்புரை....4
1. இளமை....5
2. கல்வி....12
3. பணி....17
4. போராட்டம்....21
5. கவிதைகள்....27
6. நட்பு....32
7. மாற்றம்....40
8. யானை....44
9. புகழ்....48

# பதிப்புரை

*மகாகவி பாரதியின் வரலாற்றை முதன்முதலில் அறிஞர் வ.ரா. எழுதினார். அதற்குப் பிறகு உரைநடையிலும் கவிதையிலும் பலரும் எழுதியுள்ளனர்.*

*குழந்தைகளுக்கு ஏற்ற விதத்தில், எளிய நடையில் , இனிய கவிதை நடையில் பாரதி வரலாற்றைக் கவிஞர் முருகுசுந்தரம் படைத்தளித்துள்ளார்.*

*ஓவியர் கோபண்ணா அற்புதமான படங்களைத் தீட்டியுள்ளார்.*

*தமிழ்நாட்டுக் குழந்தைச் செல்வங் கள் மட்டுமல்ல, எழுத்துக் கூட்டிப் படிக்கக் கற்றுக் கொண்டுள்ள ஆர்வமுள்ள அறிவொளிப் பெரியவர்களும் இந்த நூலைப் படித்துப் பயனடைய வேண்டும் என்று விரும்புகிறோம்.*

# *1. இளமை*




பூட்டிய விலங்கைப்
　　பொடிசெய் வதற்குப்
பாட்டுக் கவிஞன்
　　பாரதி பிறந்தான்

பாரத அன்னை
　　படும் துயர் போக்க
வீரன் பிறந்தான்
　　வேங்கைப் புலிபோல்

7

கொஞ்சிப் பேசும்
குழந்தைப் பருவம்
அஞ்சி நடக்கும்
அழகுப் பருவம்

ஈன்ற அன்னை
இலக்குமி அம்மாள்
மாண்டு மடிந்தாள்
மண்ணில் மறைந்தாள்



2




கணக்கும் அறிவுக்
கலையும் யந்திர
நுணுக்கம் பலவும்
கற்றுக் கொடுக்கத்


தந்தை நினைத்தார்
தனயன் ஏனோ
சிந்தையில் அவற்றைச்
சேர்க்க மறுத்தான்
3

கணக்கை வெறுத்துவந்தான் - கண்டால்
காத வழிசென்றான்
பிணக்கெனச் சொல்லிவந்தான் - பாரதி
பிடிவாதம் செய்துவந்தான்

சோலைக் குயிலைப்போல் - பூவைச்
சுற்றும் வண்டைப்போல்
காலை மாலைகளில்-அவன்
கவிதை பாடிவந்தான்.



4



எட்டய புரத்தினிலே - வாழ்ந்து
இருந்த புலவரெல்லாம்
பட்டம் கொடுத்தார்கள் - அவனைப்
பாரதி என்றார்கள்

கோட்டுக் களிற்றிடையே - சிங்கக்
குட்டி இருப்பதுபோல்
பாட்டுப் புலவரிடை - இளம்
பாரதி வீற்றிருந்தான்

5

தந்தை இறந்துவிட்டார் - துன்பம்
　　தாங்க முடியாமல்
சிந்தை துடித்தழுதான் - ஏதும்
　　செய்வ தறியாமல்

பிள்ளைப் பருவத்திலே - வறுமை
　　பேய்போல் வந்ததம்மா
துள்ளும் இளம்வயதில் - துன்பம்
　　சூழ்ந்து கொண்டதம்மா



6



முல்லை மலரழகி - சிவந்த
முருக்கம் பூவழகி
செல்லம் மாளைமணம் - விரைவில்
செய்து முடித்தார்கள்

பன்னிரண் டாமாண்டில் - இளம்
பாலகன் சுப்பையா
கன்னி ஒருத்திக்குக் - காதற்
கணவன் ஆகிவிட்டான்

7


# 2. கல்வி

அரசர் சபையினிலே - கவி
யழகன் சுப்பையா
முரச டிப்பதுபோல் - கவிதை
முழக்கம் செய்துவந்தான்

எட்டை நாட்டரசர் - நம்
இளங்கவி பாரதியை
விட்டுப் பிரியாமல் - கவிதை
விரும்பிக் கேட்டுவந்தார்



8



காசி நகர் சேர்ந்தான் - இந்தி
கற்று வடமொழியும்
பேசிப் புலமைபெற்றான் - உள்ளம்
பெரிதும் மகிழ்ச்சியுற்றான்

கல்லூரி யில்சேர்ந்தான் - ஆங்கிலக்
கலையில் தேர்ச்சிபெற்றான்
ஷெல்லியின் பாடல்களில் - தனது
சிந்தை பறிகொடுத்தான்


9

பச்சைக்கல் மோதிரமும் - இடுப்பில்
பட்டுக் கரைஉடையும்
கச்சையுடன் அணிந்தான் - இரண்டு
காலில் சடா அணிந்தான்

மேலை நாட்டார்போல் - அவன்
மீசை கிராப்பணிந்தான்
காலை மாலைகளில் - கங்கைக்
கரையில் திரிந்துவந்தான்



10



தேர்வில் முதல்வகுப்பில் - நல்ல
    தேர்ச்சி பெற்றிருந்தும்
ஆர்வம் கல்வியிலே - ஏனோ
    அவனுக் கிருக்கவில்லை

எட்டை நகர் வந்தான் - மீண்டும்
    இளசை மன்னவரை
விட்டுப் பிரியாமல் - கவிதை
    வேட்டையில் ஈடுபட்டான்

11


பாட்டுக் கலைபயின்றான் - இசைப்
பாடல் கேட்டுவந்தான்
ஆட்டக் கச்சேரிகளை - அவன்
அரங்கில் கண்டுவந்தான்

நூற்கள் பலசெய்தான் - கதை
நூறு சொல்லிவந்தான்
வேற்கை மன்னருக்குப் - பல
வேடிக்கை கூறிவந்தான்



12

# *3. பணி*



மதுரை மாநகரில் - சேதுபதி
மன்னர் பள்ளியிலே
புதுத்தமிழ் ஆசான் - ஆகிப்
போதனை செய்துவந்தான்

சங்கத் தமிழ்ப்பாட்டைத் - தனது
சங்கீதத் குரலால்
பொங்கும் அமுதம்போல் - பாடிப்
போதனை செய்துவந்தான்
13

மிக்க அன்புடனே - சுதேச
மித்திரன் ஆசிரியர்
தக்க பொருள்கொடுத்துப் - பாரதி
தன்னைக் கூப்பிட்டார்

பாட்டுக் கவியரசன் - சென்னைப்
பட்டினம் சேர்ந்துவிட்டான்
நாட்டு நடப்புகளை - எழுதி
நாளும் வெளியிட்டான்



14



தீவிர வாதியென - மராட்டியத்
திலகர் கொதித்தெழுந்தார்
ஆவி கொடுத்தேனும் - பாரத
அன்னையைக் காப்பனென்றார்.

அச்சம் விட்டெழுந்தான் - பத்திரி
காசிரி யன்வேலை
துச்சம் எனநினைத்தான் - பாரதி
துள்ளிப் புறப்பட்டான்

15

இந்தியா என்றொரு பத்திரிகை பொறுப்
பேற்று நடத்திவந்தான் - அதில்
சொந்தமாய்ப் பற்பல கவிதைகள் கட்டுரை
சுடச்சுட எழுதிவந்தான்

கண்டனப் பாடலும் கருத்துப் படங்களும்
காட்டிப் புரட்சி செய்தான் - அதைக்
கண்டனர் வெள்ளையர் மண்டையிடி குளிர்
காய்ச்சலும் கொண்டு விட்டார்.



16

# 4. போராட்டம்



சூரத் எனும் ஊரில் வீரர் பலர் கூடிச்
சூழ்ந்தஓர் காங்கிரசில் - அவன்
வீரத் திலகரை நேரினில் சந்தித்து
வீழ்ந்தவர் தாள்பணிந்தான்

தீப்பொறி கக்கும் கருத்துக்களால் நாட்டுச்
சிங்க இளைஞர்களைத் - தட்டிக்
கூப்பிட் டெழுப்பினான்; வீரர்கள் யாவரும்
கொந்தளிப் போடெழுந்தார்

17

பாட்டுப் புலவன் நடத்திய இந்தியாப்
        பத்திரிகை மேலே - ஆள்வோர்
நாட்டம் விழுந்தது அந்நல்லிதழ் தன்னை
        நசுக்க முடிவுசெய்தார்

நாட்டினிலே உயர் நாவல னாகிய
        நல்லவன் பாரதியைச் - சிறைக்
கூட்டுக் குள்ளே தள்ளிப் பூட்டிட வெள்ளையர்
        கூடிச் சதிபுரிந்தார்



18



ஆங்கிலர் கையில்சிக்கிச் - சிறையில்
அடைந்து கிடப்பதினும்
மாங்குயில் கூவுகின்ற - புதுவை
மாநகர் சென்றடைந்து

குமுறும் எரிமலையாய்ப் - பொங்கிக்
கொந்தளிக்கும் கடலாய்
நமது பாரதியும் - ஏடொன்று
நடத்தப் புறப்பட்டான்

வங்கப் பெருநாட்டில் - இருந்து
வந்த அரவிந்தர்
அங்கு வாழ்ந்திருந்தார் - வ.வே.சு
அய்யரும் அங்கிருந்தார்

வரிப்புலி பாரதியும் - இவ
வறிஞருடன் சேர்ந்தான்
சிரிப்பில் பேச்சினிலே - தன்
சிந்தை மறந்திருந்தான்





வீரத் தமிழ்மறவன் - சுப்புரத்ன
வேந்தன் தன்னோடு
பாரதி பழகிவந்தான் - அவனுக்குப்
பாடல் பயிற்றிவந்தான்

துப்பாக்கியின் வயிற்றில் - பீரங்கி
தோன்றும் கதைபோலச்
சிப்பாய் பாரதிக்கு - நல்ல தோர்
சீடன் கிடைத்துவிட்டான்

இந்தியா பத்திரிகை - மீண்டும்
எழுந்து நடமாடி
வந்தே மாதரமாம் - கீதத்தை
வாரி இறைத்ததடா

வங்க அரவிந்தர் - நடத்தி
வந்த பத்திரிகை
தங்கக்கைப் பாரதியால் - மீண்டும்
தளிர்த்து வந்ததடா



22

# *5. கவிதைகள்*



துள்ளும் தமிழ்க்கவிதை - பாடத்
துடித்த பாரதிக்குக்
கிள்ளும் பசிப்பிணியும் - வறுமைக்
கேடும் சூழ்ந்ததம்மா

செல்வர் முருகேசர் - வெல்லச்சு
செட்டியார் போன்றசிலர்
பல்விதமாய் உதவிப் - பாரதி
பசிப்பிணி தீர்த்துவந்தார்

23

பண்ணிசைத் தே அலைகள் - பொங்கிப்
பாயும் கடற்கரையில்
கண்ணன் பாடல்களைப் - பாடிக்
களிப்பு மிகக்கொண்டான்

கத்தும் கடல்அலையின் - ஆட்டம்
கண்ட பாரதியும்
தத்தரி தரிகிடதோம் - என்று
தாளமிட்டு ஆடிநின்றான்



24



முத்தியால் பேட்டையிலே - மரங்கள்
மொய்த்த ஓர் சோலையிலே
சித்தம் களிகூரக் - குயில்கள்
சேர்ந்து பண்ணிசைக்கும்

பாரதி அங்கிருந்தே - குயில்
பாட்டுக் குயிர்கொடுத்தான்
வீரம் வேண்டுமென்றான் - பெண்டிாகக
விடுதலை தேவையென்றான்
25

புதுவையிலே ஒருநாள் - பெரும்
புயல் அடித்ததனால்
எதிர் இருந்தமரம் - வீடு
எல்லாம் வீழ்ந்தனவே

பொங்கும் பெரியபுயல் - நெஞ்சில்
புறப்பட்ட காரணத்தால்
மங்கை பாஞ்சாலி - சபதம்
மாக்கவி பாடிவைத்தான்



26



வீட்டின் முற்றத்திலே - ஒருநாள்
வீற்றிருக்கையிலே
பாட்டையில் கோணங்கி - ஒருவன்
பாடி எதிர்வந்தான்


அரையில் அணிந்திருந்த - ஆடையை
அவிழ்த்துக் கொடுத்துவிட்டு
மரம்போல் பாரதியும் - நின்றான்
மனைவி வருந்திநின்றாள்

# 6. நட்பு

சமைக்கக் காய்கறிகள் - வாங்கச்
சந்தைக்குச் சென்றொருநாள்
சுமக்கும் அளவுக்குக் - கீரை
சுமந்து திரும்பிவந்தான்

வீட்டுக்கு ஒருகட்டாய் - அதை
வேற்றோர்க்கு அளித்துத்தன்
வீட்டுக்கு ஒருகட்டைக் - கொண்டு
வீரன் திரும்பிவந்தான்





நண்பர்களை ஒருநாள் - வீட்டுக்கு
நாவலன் கூப்பிட்டான்
எண்ணம் அறிவதற்கே - நண்பர்கள்
இல்லம் வந்தடைந்தார்

பறையர் குலத்தவனை - மேலாம்
பார்ப்பனன் ஆக்குதற்கு
மறைகள் ஓதிநின்றான் - பூணூல்
மாட்டிச் சடங்குசெய்தான்


29

வெடிக்கும் எரிமலைபோல் - பாடல்
வீசும் பாரதியைக்
கடத்திச் செல்வதற்குப் - போலீஸ்
காவலர் காத்திருந்தார்

வஞ்சகப் போலீசார் - விரித்த
வலையில் வீழாமல்
செஞ்சொற் கவியரசை - அவர்
சீடர் காத்து நின்றார்



30




பத்து வருடங்கள் - புதுவையில்
பாரதி வாழ்ந்த பின்னர்
சித்தம் சலிப்படைந்தே - சென்னை
சேர முடிவுசெய்தான்

கடலூர் எல்லையிலே - பாரதி
காலை வைத்தவுடன்
திடுமெனப் போலீசார் - பாய்ந்து
சிறையில் தள்ளிவிட்டார்

நாவலன் பாரதியை - அவன்
நண்பர்கள் சிறைமீட்டார்
காவலில் வாடியவன் - மீண்டு
கடையம் சென்றுவிட்டான்

தாவும் குழந்தைகளைப் - பிரிவால்
தவிக்கும் மனையாளைப்
பாவலன் சென்றுகண்டான் - அவர்கள்
பக்கம் அமர்ந்து கொண்டான்





கழுதைக் குட்டியினை - வழியில்
கண்ட பெருங்கவிஞன்
தொழுது முத்தமிட்டான் - தோளில்
தூக்கி நடந்துவந்தான்

பாதையில் சென்றவர்கள் - அவனைப்
பயித்தியம் என்றார்கள்
மேதையின் செயலெல்லாம் - இந்த
மேதினி அறிந்திடுமோ?

33

நண்பரின் திருமணத்தில் - ஓர்நாள்
நாவலன் விருந்துண்டான்
பண்பறியாத சிலர் - இதைப்
பார்த்து வெறுப்படைந்தார்

சாதியில் தாழ்ந்தவரின் - வீட்டில்
சமபந்தி உண்டதனால்
சாதியில் தள்ளிவைத்தார் - பாரதி
சற்றும் அஞ்சவில்லை



34



காக்கைஎன் சாதியென்றான் - பொங்கும்
கடலும்என் சாதியென்றான்
பூக்கள் கொடிகள் எல்லாம் - பாடும்
புலவரின் தோழன் என்றான்

சாதி சமயங்களைப் - பேசிச்
சண்டைகள் செய்பவரை
மோதி மிதிப்பனென்றான் - அவர்கள்
முகத்தில் உமிழ்வனென்றான்

35


# 7. மாற்றம்

மீண்டும் பாரதியைச் - சுதேச
மித்திரன் ஆசிரியர்
வேண்டிக் கூப்பிட்டார் - கவிதை
வீரன் புறப்பட்டான்

பாட்டும் கட்டுரையும் - இன்பம்
பாய்ச்சும் சிறுகதையும்
தீட்டிப் புகழ்பெற்றான் - நாட்டார்
தேன்போல் வரவேற்றார்



36



குமுறும் பேரலைகள் - தாவிக்
குதிக்கும் கடற்கரையில்
இமயப் பெருமலைபோல் - நின்றான்
இடிபோல் முழக்கமிட்டான்

சித்திரப் பாவையைப்போல் - மக்கள்
சிறிதும் அசையாமல்
முத்திரைப் பொன்னழகன் - பேச்சை
முன்னின்று கேட்டார்கள்

37

மானும் மயிலினமும் - குரங்கும்
மதம்பொழி யானைகளும்
காணும் விருப்போடு - மிருகக்
காட்சிச் சாலைசென்றான்

கூட்டுக் குள்ளிருந்த - சிங்கக்
கோளரி ஒன்றைக்கை
நீட்டித் தடவிநின்றான் - அது
நிமிர்ந்து முழங்கியது



38




பொக்கை வாய்ச்சிரிப்பால் - இந்தப்
பூமியில் உள்ளோரைக்
கைக்குள் அடக்கிவிட்ட - காந்தி
கடற்கரைச் சென்னைவந்தார்

காந்தியைக் காண்பதற்குப் - பாரதிக்
கவிஞன் சென்றிருந்தான்
மாந்தருள் தெய்வத்தைக் - கவிதை
மன்னவன் வாழ்த்திநின்றான்


## 8. யானை

சந்தத் தமிழ்க்கவிஞன் - பார்த்த
சாரதி கோவிலுக்குச்
சிந்தை மகிழ்ச்சியுடன் - வெள்ளிக்
கிழமை செல்வதுண்டு

கோயில் யானைக்குத் - தேங்காய்
கொடுத்துப் பழகிவந்தான்
தாயினும் அன்போடு - பழம்
தந்து பழகி வந்தான்



40



கொல்லும் மதம்பிடித்தே - யானை
கோபம் கொண்டொருநாள்
செல்வோர் வருவோரைக் - கண்டு
சீறத் தொடங்கியது

பாட்டுக் கவியரசன் - அதன்
பக்கம் சென்றுவிட்டான்
போட்டுத் துவைத்தவனை - நிலத்தில்
புரட்டி விட்டதடா

சீற்ற யானையிடம் - அன்று
    சிக்கிய பாரதியைக்
காற்றைப் போலவந்தே - குவளைக்
    கண்ணன் மீட்டுவிட்டான்

பொன்னைப் போன்ற உடல் - எங்கும்
    புண்ணாய்ப் போனதடா
சின்னஞ் சிறியஉடல் - மாறிச்
    சிதைந்து விட்டதடா





செல்லம் மாள் அழுதாள் - இளஞ்
சிட்டுக் குழந்தைகளும்
மெல்ல அருகில்வந்தே - தந்தை
மேனியைப் பார்த்தழுதார்

மன்னவன் பாரதியும் - மூன்று
மாதம் கழிந்தபின்னர்
பொன்னுடல் தன்னைவிட்டான் - அழியாப்
புகழுடம்பு எய்திவிட்டான்

43

# 9. புகழ்

செந்தமிழுக்கொரு
சிங்கக் கவியென
வந்தான்! வந்தான்! - பாடல்
சந்தத் தமிழினில்
சிந்தை குளிரவே
தந்தான்! தந்தான்!
பாட்டுப்பெருங்கவி
பாரதி யின்புகழ்
கண்டோம்! கண்டோம்! - அவன்
பாத மலர்களை
நாம் தலைமீது
கொண்டோம்! கொண்டோம்!




*மகாகவி பாரதியின் வரலாற்றை முதன்முதலில் அறிஞர் வ.ரா. எழுதினார். அதற்குப் பிறகு உரைநடையிலும் கவிதையிலும் பலரும் எழுதியுள்ளனர்.*

*குழந்தைகளுக்கு ஏற்ற விதத்தில், எளிய நடையில் , இனிய கவிதை நடையில் பாரதி வரலாற்றைக் கவிஞர் முருகுசுந்தரம் படைத்தளித்துள்ளார்.*